**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**DVC No**.06/2022

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: விஜயகுமார் (எ.சா.1) | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**எ.சா.1 குறுக்கு விசாரணை:–**(மனுதாரர் தரப்பு)

கிருஷ்ணவேணி என்ன உறவு முறை என்றால் எனக்கு தங்கை முறையாவார். மகாதேவி எனது அம்மா ஆவார். பாவாயம்மாள் எனது அப்பாவின் அம்மா ஆவார் நானும் மனுதாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கும் மனதாரருக்கும் ஏற்பட்ட திருமணம் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு ஜாதகம் பார்த்து நடத்தப்பட்டது என்றால் சரிதான். திருமணமானது தரகர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டதா என்றால் இல்லை மனதாரரின் குடும்பத்தினர் ஒருவர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது அவரது பெயர் ஞாபகம் இல்லை08.12. 2019 ஆம் தேதி அன்று சிவகிரி அம்மன் கோவிலில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எங்களது நிச்சயதார்த்தமும் அதே திருமண மண்டபத்தில் தான் நடைபெற்றது எங்களது திருமணத்தில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்களது திருமணத்தின் பயனாக ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான் அவரது பெயர் ஸ்ரீநிதி. தற்போது ஸ்ரீநிதி மனுதாரரின் பராமரிப்பில் உள்ளார் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள சமூக நலத்துறை அலுவலர் விசாரித்தார் என்றால் சரிதான். மேற்படி அலுவலர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் திருமணத்தின் போதும் நிச்சயதார்த்தத்தின் போதும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான். மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் M.A.., M.Phil., படித்துள்ளார். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். திருமணத்திற்கு முன்பே நானும் மனுதாரரும் என்ன படிப்பு படித்துள்ளோம் என்று இருவருக்கும் தெரியும் என்றால் சரிதான். நான் எனது அம்மா மற்றும் எனது ஆத்தா ஆகியோர்கள் கூட்டுக்குடும்பமாகத்தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் திருமணத்திற்கு முன்பு வரை கூட்டு குடும்பமாக இருந்தோம், அதற்குப் பிறகு தனிகுடும்பமாக வந்து விட்டோம். மேற்படி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.18 08:34:34 +0530

நானும் மனுதாரரும் ஒரே காம்பவுண்டுக்குள் உள்ள மற்றொரு வீட்டில் தான் தனிக்குடித்தனம் இருந்து வந்தோம் என்றால் சரிதான். ஈரோட்டில் மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் தாக்கல் செய்திருந்த மனுவை திரும்ப பெற்று விட்டேன் என்றால் சரிதான். மேற்படி நான் தாக்கல் செய்த மனுவில் வாபஸ் வாங்கியதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மனுவை நான் வாபஸ் வாங்கியதற்கான காரணத்தை இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

**மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.18 08:34:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.